Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes Available @
Syllabus www.AllAbtEngg.com
Question Papers
Results and Many more…

12312

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2020
## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி பொதுத்தமிழ் . மதிப்பெண்கள்:90

பகுதி - I

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும் அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

குறிப்பு : 1. விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் ., சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

பகுதி - அ ( செய்யுள் , உரைநடை )

I.பலவுள் தெரிக : (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக) 14 X 1 = 14

1) " மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு "
கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்.
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
உ) பொதிகையில் தோன்றியது
ங) வள்ளல்களைத் தந்தது.
அ) க மட்டும் சரி ஆ) க. உ . இரண்டும் சரி
இ) ங மட்டும் சரி ஈ) க . ங இரண்டும் சரி

2) உலகப் புவி நாள்
அ) ஏப்ரல் 21 ஆ) ஏப்ரல் 22 இ) ஜூன் 21 ஈ) ஜூலை 22

3) " தமிழ்த்தாத்தா " என்னும் சிறப்புக்குரியவர்
அ) உ.வே.சா ஆ) ம.பொ.சி இ) தெ.பொ.மீ ஈ) மு.வ.

4) மாதவி தனது ஆடலை அரங்கேற்ற விரும்பிய வயது.
அ) 7 ஆ) 9 இ) 12 ஈ) 15

5) கிறித்துவக் கம்பர் என்று போற்றப்பட்டவர்
அ) வீரமாமுனிவர் ஆ) எச். ஏ. கிருட்டிணனார்
இ) ஜி. யு. போப் ஈ) ஈராசு பாதிரியார்.

6) உவா உற வந்து கூடும்
உடுபதி இரவி ஒத்தார் - யார் யார் ?
அ) சடாயு , இராமன் ஆ) இராமன் , குகன்
இ) இராமன் , சுக்ரீவன் ஈ) இராமன் , சவரி

ஆ.அனைத்து வினாக்களுக்கும் விடை தருக .

7) " கொன்ற " என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை
அ) கொன் + ற் ஞ அ ஆ) கொன்று + அ
இ) கொன் + ற் + உ ஈ) கொல் (ன்) + ற் + அ

8) பொய்யா வானம் புதுப்பெயர் பொழிந்தென் -
அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறு கெட்ட எதிர் மறை பெயரெச்சம்

9) ஐப்பசி அடைமழை கார்த்திகை கனமழை என்பது
அ) அடுக்குத் தொடர் ஆ) சொலவடை இ) இரட்டைக்கிளவி ஈ) கிளவி

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



10) சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல் இன்னொன்றைக் கூறிக் குறிப்பால் உணர்த்துவது .
அ) படிமம் ஆ) தொன்மம் இ) குறியீடு ஈ) உள்ளுறை உவமம்

11) உரிமைத் தாகம் என்ற சிறுகதையின் ஆசிரியர்
அ) பூமணி ஆ) புதுமைப்பித்தன் இ) உத்தம சோழன் ஈ) சுஜாதா

12) " இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் " என்ற விதிப்படி அமைந்த சொல்
அ) உலகத்தார் ஆ) பனைத்துணை இ) கொல்லாது ஈ) காப்பால்

13) பொருத்திக் காட்டுக .

| | | |
|---|---|---|
| அ) ஐப்பசி | - | 1. விளக்குத்திருவிழா |
| ஆ) கார்த்திகை | - | 2. திருவாதிரைத் திருவிழா |
| இ) மார்கழி | - | 3. ஓணவிழா |
| ஈ) மாசி | - | 4. கடலாட்டு விழா |

அ) 3,1,2,4 ஆ) 4,3,2,1
இ) 2,1,3,4 ஈ) 1,2,4,3

14) வெண்பாவை _____ என்றும் அழைப்பர்
அ) வன்பா ஆ) கலிப்பா இ) அகற்வபா ஈ) கலிவெண்பா

## பகுதி - II

### பிரிவு - 1

II.குறுவினா (அ) எவையேனும் மூன்றனுக்கு விடைதருக. 12 x 2 = 24

15) ' நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது ' - விளக்கம் தருக.
16) மறக்கக் கூடாது , மறக்கக் கூடியது எவற்றை ?
17) கலிவிழா , ஒலிவிழா விளக்கம் தருக ?
18) கடையெழு வள்ளல்கள் யாவர் ?

### பிரிவு - 2

.குறுவினா (ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20) அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை ?
21) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருந்தி எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக .

22) உவமைத் தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக. (தாமரை இலை போல )
23) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பொற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
24) பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
25) பிழைகளை நீக்கி எழுதுக.
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
26) சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. கோவில்
27) ' பேசுவார் ' - உறுப்பிலக்கணம் தருக.
28) ' பெருங்கடல் ' - புணர்ச்சி விதி தருக.
29) கீழ்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் அமைத்து எழுதுக.
குதிரை , வேகம் , ஓடு , தாவு
30) மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



## பகுதி - III

### பிரிவு - 1

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக : 7 x 4 = 28

31) இராமலிங்க அடிகள் கந்த வேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

32) குகனோடு ஐவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

33) ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :

34) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ் நதி கூறுகிறார் ?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :

35) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் புரிந்துரைப்பனவற்றை எழுதுக.

36) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

37) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க .

38) பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்கம் தருக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :

குறிப்பு : காது கேளாத மணவர்களுக்கு மட்டும் வினா எண் 42க்கு பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39) நிரல் நிறை அணி (அல்லது) சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40) இலக்கிய நயம் பாரட்டுக.(மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

- கவிமணி தேசிய விநாயகம்.

41) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கவிதை புனைக.
மழை (அல்லது) மனிதநேயம்.

42) தமிழாக்கம் தருக.
I make sure I have the basic good habits which include respecting my elders , greeting people when I meet them ,wishing them well when departing etc other than this observing the law , serving the poor and downtrodden helping the sick and needy,giving shelter to the homeless,assisting some one with a physically chalanged etc. are also other good habits of mine. To lead on a peaceful life. I develop other good habits,writing,listeneing to music,dancing singing etc , are other such habits which fulfill the needs of my soul.

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



42) காது கேளாதோருக்கான மாற்று வினா.

பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரிய தொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல் அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் .மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்.மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்பவரும் மக்களே ., மொழியால் வளர்பவரும் மக்களே.

வினாக்கள்

1) மொழி என்பது யாது
2) மொழி எப்படிப்பட்ட கருவியாக செயல்படுகிறது ?
3) பெற்ற தாயின் முதல் வேட்கை யாது ?
4) மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?

43) பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

தினை விதைத்தவன் தினை அறுப்பான்

அல்லது

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

## பகுதி - IV

இருபக்கங்களுக்கு மிகாமல் விடைதருக : 3 x 6 = 18

44) தமிழின் சீரிளமைத்திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதி பலிக்கின்றன - நிறுவுக.

45) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் . கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46) சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு ' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?

(அல்லது)

உரிமைத்தாகம் ' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையை தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக :

44) அ) ' வையகம் பனிப்ப ' எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல் 1 x 4 = 4

ஆ) ' வரும் ' என முடியும் குறட்பா 1 x 2 = 2

********

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net